# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2081/43 - 2018 ජූලි මස 25 වැනි බදාදා - 2018.07.25

*2081/43 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி புதன்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**சுங்கக் கட்டளைச் சட்டத்தின் கீழான அறிவித்தல்**

*(அரசிறைப் பாதுகாப்புக் கட்டளை இல. 05/ 2018)*

*சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழான பின்வரும் தீர்மானம் 2018, யூலை மாதம் 04 ஆந் திகதி இடம்பெற்ற செயலமர்வில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*ஆர். எச். எஸ். சமரதுங்க,*
*செயலாளர்,*
*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.*

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2018, யூலை 25.*

**தீர்மானம்**

*இத்தீர்மானம் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து, சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 235) 10 ஆம் பிரிவின் கீழ் இதற்கான அட்டவணையின் 3 ஆம் நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருட்களின் மீது அவ் அட்டவணையில் 5 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள பொது வீதங்களின்படி அல்லது சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 135) "அ" எனும் அட்டவணையின் ஏற்பாடுகளின் கீழ் முன்னுரிமை வீதங்கள் விதிக்கப்படவும் செலுத்தப்படவும் வேண்டியவிடத்து, அவ் அட்டவணையின் 4 ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவுகளில் விதிக்கப்பட்டுள்ள முன்னுரிமை வீதங்களின்படி இறக்குமதித் தீர்வை வரிகள் விதிக்கப்படவும் செலுத்தப்படவும் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.*


1A - G 28228 — 37 (2018/08)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை முன்னுரிமை (4) | சுங்கத் தீர்வை பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| **27.10** | | | **பெற்றோலியம் எண்ணெய்களும், நிலக்கரித் தார் கலவை (பிற்றுமின்ஸ்) கனிப்பொருட்களிலிருந்து பெறப் பட்ட எண்ணெய்களும், சுத்திகரிக்கப் படாதவை தவிர்ந்தவை : வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது சேர்க்கப் படாத நிறையில் 70% அல்லது கூடுக ளாக பெற்றோலிய எண்ணெய் அல்லது நிலக்கரித் தார் கலவை (பிற்றுமின்ஸ்) கனிப்பொருட்களிலி ருந்து பெறப்பட்ட எண்ணெய்யைக் கொண்ட தயாரிப்புகள், இவ்வெண் ணெய்கள் இத்தயாரிப்புகளின் அடிப் படை உள்ளீடுகளாக இருக்க வேண் டும்** | | | |
| | | | | | | |
| | | - | **நிலக்கீழ்சார்ந்த கனிப் பொருட்களிலி ருந்து பெறப்பட்ட பெற்றோலிய எண் ணெய்கள் மற்றும் எண்ணெய்கள் (சுத்தி கரிக்கப்படாதவை தவிர) மற்றும் வேறெங்கும் குறிப்பிடப்படாத அல்லது உள்ளடக்கப்படாத தயாரிப்புகள், நிலக் கீழ்லார்ந்த கனிப் பொருட்களி லிருந்து பெறப்பட்ட பெற்றோலிய எண்ணெய் அல்லது எண்ணெய்களா னது நிறையளவில் 70% அல்லது அதற்கு மேற்பட்ட அளவினைக் கொண்டவை, இவ்வெண்ணெய்கள் தயாரிப்புகளானது அடிப்படை உள் ளீடுகளாக இருத்தல் வேண்டும். அவை பயோ டீசலினைக் கொண் டவை தவிர மற்றும் கழிவு எண் ணெய்கள் தவிரவும்** | | | |
| | | | | | | |
| | | --- | பெற்றோல் : | | | |
| | *2710.12.21* | ---- | ஒக்ரேன் 92 அடங்கிய பெற்றோல் | | ஒரு லீற்றர் ரூபா 25.42 | கி. கிராம் |
| | *2710.12.22* | ---- | ஒக்ரேன் இலக்கம் 95 அடங்கிய பெற்றோல் | | ஒரு லீற்றர் ரூபா 25.59 | கி. கிராம் |
| | *2710.12.29* | ---- | பிற | | ஒரு லீற்றர் ரூபா 25.59 | கி. கிராம் |
| | | | | | | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

| இ. ப. த. இல. (1) | இ. மு. குறியீடு (2) | | விவரணம் (3) | சுங்கத் தீர்வை முன்னுரிமை (4) | சுங்கத் தீர்வை பொது (5) | அளவுக் கூறு (6) |
|---|---|---|---|---|---|---|
| | | --- | வாயு எண்ணெய்/டீசல் : | | | |
| | 2710.19.41 | ---- | சுப்பர் டீசல் - 10 மி. கி./கி. கி. இற்கு மேற்படாத சல்பர் அடங்கியது | | ஒரு லீற்றர் ரூபா 10.55 | கி. கிராம் |
| | 2710.19.42 | ---- | பிற டீசல் - 10 மி. கி./கி. கி. இற்கு மேற்பட்ட ஆனால் 500 மி. கி./கி. கி. இற்கு மேற்படாத சல்பர் அடங்கியது | | ஒரு லீற்றர் ரூபா 5.85 | கி. கிராம் |
| | 2710.19.49 | ---- | பிற | | ஒரு லீற்றர் ரூபா 10.55 | கி. கிராம் |

*08-685*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.